FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
~~(Under Section 154 Cr.P.C.)~~
~~(குற்ற விசாரணை முறை சட்டம் பிரிவு 154 இன் கீழ்)~~
Under Section 173 BNSS

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

DSIV Sanchitha C 8081649

1. District : திண்டுக்கல் PS: V4 AC Year: 2025 FIR No.: 12/2025 Date: 15.10.2025
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act 1988, as amended in 2018 Sections பிரிவுகள்:
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்: u/s 7 (a)
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : Date to : 14.10.2025 Prior to
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : Time to : 12.30 hrs to 19.30 hrs.
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
(b) Information Received at PS. Date : Time : 15.10.2025 at 17.00 hrs.
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
(c) General Diary Reference : Entry No(s) Time :
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Computer typed

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 30 கி.மீ தெற்கு திசை
Beat Number : (b) Address : மோட்டார் வாகன ஆய்வாளர் (Gr I) அலுவலகம்,
முறைக் காவல் எண் முகவரி வத்தலகுண்டு, திண்டுக்கல் மாவட்டம்.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : R. ஜெயபாண்டியன் (b) Father's/ Husband's Name : ராமகிருஷ்ணன்
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : (d) Nationality : இந்தியர் (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : (g) Address : மாவட்ட அலுவலகம், மதுரை
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) 1) திரு. R. சுகுமாரன், மோட்டார் வாகன ஆய்வாளர் (Gr I), வத்தலகுண்டு, திண்டுக்கல்.
2) திரு. M. பாண்டியராஜன், த/பெ பெரியகருப்பன், நாராயணபுரம், உத்தமபட்டி, சின்னமனூர், தேனி
3) திரு. S. அஜும் தாசீன், த/பெ. தெரியவில்லை, திருக்கோவிலூர்பட்டி, திண்டுக்கல், திண்டுக்கல்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

---

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

—

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

—

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

நாளிதுநாளில் இணைக்கப்படுகிறது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

15/10/25

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

15.10.2025- 18.00hrs

Name: பெயர் .....
Rank: நிலை .....No. எண் .....

திண்டுக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கு.எண்.12/2025, சட்டப்பரிவு.7(a) ஊழல் தடுப்பு சட்டம் 1988 (திருத்தி அமைக்கப்பட்ட) சட்டம் 2018 வழக்கின் முதல் தகவலறிக்கையின் தொடர்ச்சி.

திண்டுக்கல், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர் ஆகிய நான் இன்று 15.10.2025-ம் தேதி மாலை 17.00 மணிக்கு நிலையத்தில் இருந்தபோது மதுரை மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளர் திரு.R.ஸ்ரீதரபாண்டியன், என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான புகாரை பெற்று 15.10.2025-ம் தேதி மாலை 17.00 மணிக்கு கீழ்கண்டவாறு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். புகாரின் விபரம் பின்வருமாறு: அனுப்புநர் திரு.R.ஸ்ரீதரபாண்டியன், வயது.48/2025, த/பெ.ராமசந்திரன், ஆய்வுக்குழு ஆய்வாளர்,மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகம், மதுரை. பெறுநர். காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திண்டுக்கல் அய்யா, நான் மதுரை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகத்தில் ஆய்வுக்குழு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நேற்று 14.10.2025ம் தேதி காலை சுமார் 10.30 மணிக்கு வத்தலக்குண்டு மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தில் பணியாற்றும் மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-I திரு.இளங்கோ அவர்கள் ஓட்டுநர் உரிமம், பழகுநர் உரிமம், வாகன உரிமம் புதுப்பித்தல், வாகனபதிவு ஆகியவற்றிற்கு பொதுமக்களிடமிருந்து லஞ்சம் பெறுவதாகவும், எனவே உடனே கிளம்பி திண்டுக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் ஆஜராக எனக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதின் பேரில் நான் மதியம் சுமார் 12.00 மணிக்கு திண்டுக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் அறிக்கை செய்தேன். பின்னர் அலுவலகத்தில் இருந்து புறப்பட்டு மதியம் சுமார் 12.30 மணிக்கு வத்தலக்குண்டு மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்கள் ஆய்வு செய்யும் வத்தலக்குண்டு To நிலக்கோட்டை செல்லும் ரோட்டின் தெற்கு பக்கம் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தில் இருந்து சுமார் 100 மீட்டர் தொலைவில் அமைந்துள்ள மைதானத்திற்கு நான், காவல் ஆய்வாளர் மற்றும் போலீஸ் பார்ட்டி ஆகியோர் சென்றோம். அங்கு வாகனங்கள் ஆய்வுக்காக நிறுத்தப்பட்டிருந்தது. அங்கிருந்த ஒருவர் வெள்ளை சட்டையும் காக்கிநிற பேண்டும் அணிந்திருந்து வாகனங்களை ஆய்வு செய்து கொண்டிருந்தார். அந்த நபரிடம் நான் என்னை அறிமுகம் செய்தேன், பின்பு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு காவல் ஆய்வாளர் தன்னையும் மற்றும் தனது காவலர்களையும் அறிமுகம் செய்து கொண்டு திடீர் தணிக்கை செய்வதற்காக வந்த விபரம் தெரிவிக்கப்பட்டது. அப்போது அவரை பற்றி விசாரிக்க அவரது

பெயர் திரு.R.இளங்கோ என்றும், மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-1, வத்தலக்குண்டு அலுவலகத்தில் கடந்த 22.05.2025ம் தேதி முதல் பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். பின்னர் மேற்படி மைதானத்தில் நிறுத்தப்பட்டிருந்த அன்பு டிரைவிங் ஸ்கூல் என்று எழுதப்பட்டிருந்த TN 57 CZ 5844 என்ற பொலிரோ வாகனம் குறித்து விசாரிக்க திரு.இளங்கோ அவர்கள் அந்த வாகனம் இன்று அலுவலகத்தில் இருந்து மைதானத்திற்கு ஆய்வுக்கு எடுத்து வந்ததாகவும், அந்த வாகனத்தை அன்பு டிரைவிங் ஸ்கூலைச் சேர்ந்த திரு.பிரேம்குமார் என்பவர் ஓட்டிக்கொண்டு வந்ததாக தெரிவித்தார். அந்த வாகனத்தை என் முன்பாக சோதனை செய்ய மேற்படி வாகனத்தின் டேஸ்போர்டில் கீழ்கண்ட ஆவணங்கள் இருப்பது கண்டறியப்பட்டது.

வ.எண்	ஆவண விபரம்	பக்கங்களின் விபரம்
1	TN 57N 2182 என்ற வாகனத்திற்கான தகுதிசான்று பெறுவது சம்மந்தமான விண்ணப்பம்	8 தாள்கள்
2	TN 57N 2487 என்ற வாகனத்திற்கான தகுதிசான்று பெறுவது சம்மந்தமான விண்ணப்பம்	7 தாள்கள்
3	வத்தலக்குண்டு காவல் நிலைய குற்ற எண்.290/2025 என்ற வழக்கில் தொடர்புடைய TN57CY 7722 டாடா ஏஸ் வாகனத்தை தணிக்கை செய்து சான்று வழங்க வத்தலக்குண்டு காவல் நிலைய ஆய்வாளரால் வழங்கப்பட்ட வேண்டுகோள் கடிதம்	6 தாள்கள்
4	TN30 AJ 0819 என்ற வாகனத்திற்கு வாகன வகை மாற்றம் கோரும் மனு மற்றும் அதனுடன் மேற்படி வாகனத்தின் அசல் பதிவு சான்று வைக்கப்பட்டிருந்தது.	16 தாள்கள்
5	வத்தலக்குண்டு மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலக தணிக்கை பதிவேடு, நாள்.25.08.2025 முதல்	Triplicate No.B531351 to B531400 அதில் 531369 வரை பயன்படுத்தப்பட்டுள்ளது.
6	TN57L 3244 என்ற வாகனத்திற்கான தகுதிசான்று பெறுவது சம்மந்தமான விண்ணப்பம்	5 தாள்கள்

பின்னர் திரு.இளங்கோ அவர்களிடம் இன்று பதிவுக்காக வந்த வாகனங்களின் ஆவணங்களை யார் எடுத்துக்கொண்டு அலுவலகத்திற்கு கொண்டு சென்றது என்பது குறித்து விசாரிக்க, அதற்கு அவர் வத்தலக்குண்டு மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகததிற்கு எதிரே வாகன கன்சல்டிங் நடத்தி வரும் திரு.பாண்டியராஜன் மற்றும் திரு.அஜய் ஜான்சன் ஆகியோர் சிறிது நேரத்திற்கு முன்பு அவர்களது அலுவலகத்திற்கு

கொண்டு சென்றதாக தெரிவித்தார். அதன்பேரில் திரு.இளங்கோ அவர்களை அழைத்துக்கொண்டு மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்திற்கு சுமார் 12.45 மணியளவில் புறப்படப்பட்டது. மேலும் திரு.பாண்டியராஜன் அவர்களின் அலுவலகமானது நிலக்கோட்டை To வத்தலக்குண்டு செல்லும் சாலையில் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்திற்கு சுமார் 50 மீட்டர் தொலைவில் மேற்படி ரோட்டின் தெற்குபுறம் வடக்கு முகம் பார்த்தவாறு ஸ்ரீவாகன புகை சோதனை மையம் அருகே இருப்பதாக திரு.இளங்கோ அவர்கள் தெரிவித்தார். அதன்பேரில் அங்கே நின்று கொண்டிருந்த இருவரை என் முன்பு விசாரிக்க ஒருவருடைய யெயர் பாண்டியராஜன், த/பெ.மொக்கமாயி, நடுத்தெரு, உச்சப்பட்டி, நிலக்கோட்டை என்றும், வாகன பதிவு தொடர்பான பணிகளை செய்து வருவதாகவும், வத்தலக்குண்டு மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம் எதிரே ஒரு கடை எடுத்து அதில் வைத்து பணிகளை செய்து வருவதாக தெரிவித்தார். அவர் கையில் வைத்திருந்த Sri Arunachala Groups என்ற கருப்பு நிற கைபை குறித்து கேட்டபோது, அதில் வாகனம் தொடாப்பான ஆவணங்கள் வைக்கப்பட்டிருப்பதாக தெரிவித்தார். மற்றொரு நபரை விசாரிக்க அவரது பெயர் திரு.அஜய் ஜான்சன், த/பெ.சேவியர், சிலுக்குவார்பட்டி, நிலக்கோட்டை என்றும், வாகன பதிவு தொடர்பான பணிகளை செய்து வருவதாகவும், தெரிவித்தார். பின்னர் மேற்படி இருவரையும் விசாரணைக்காக அழைத்துக்கொண்டு சுமார் 13.10மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு நடந்தே சுமார் 13.15 மணிக்கு வத்தல்க்குண்டு மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்திற்கு வரப்பட்டது. நிலக்கோட்டை To வத்தலக்குண்டு செல்லும் ரோட்டின் வடக்கு பக்கம் தெற்கு பார்த்து வாசல் கொண்ட மேற்படி அலுவலகத்தின் உள்ளே நுழைந்த போது மோட்டார் வாகன ஆய்வவாளர் நிலை-1 என்று குறிப்பிடப்பட்டு கிழக்கு பார்த்து வாசல் கொண்ட அறை உள்ளே சென்று மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-1 திரு.இளங்கோ அவர்களின் இருக்கை முன்பாக திரு.பாண்டியராஜன் வைத்திருந்த Sri Arunachala Groups என்ற கருப்பு நிற கைபை சோதனை செய்யப்பட்டது. அந்த பையின் சைடு ஜிப்பை திறந்து பார்த்தபோது ரூபாய் நோட்டுகள் தனித்தனியாக கலைந்து காணப்பட்டது. அதை எண்ணிப்பார்க்க 500x36=18,000/-, 200x6=1200, 100x22=2200/-, 20x1=20 என மொத்தம் ரூ.21,420/- இருப்பது கண்டறியப்பட்டது. பின்னர் மேற்படி பையின் நடுப்பக்க ஜிப்பை நிறந்து பார்த்தபோது கீழ்கண்ட ஆவணங்கள் காணப்பட்டது.

வ.எண்	ஆவண விபரம்	பக்கங்களின் விபரம்
7	TN 67S0402 என்ற வாகனத்தின் பதிவை புதுப்பிப்பதற்கான விண்ணப்பம்	4 தாள்கள்
8	TN 67S0403 என்ற வாகனத்தின் பதிவை புதுப்பிப்பதற்கான விண்ணப்பம்	2 தாள்கள்
9	மோட்டார் வாகனங்களுக்கு சிறப்பு பதிவெண் பெறுவதற்கான விண்ணப்பம் TN57CT 9697	2 தாள்கள்
10	TN 85L9633 என்ற வாகனத்தின் HIRE PURCHASE Removal Application	8 தாள்கள்
11	TN 60W1489 என்ற வாகனத்தின் Name Transfer Application	6 தாள்கள்
12	TN 76S9430 என்ற வாகனத்தின் Name Transfer Application	6 தாள்கள்
13	TN65P8147 என்ற வாகனத்தின் RC Book	--
14	TN57AB 4402 என்ற வாகனத்தின் RC Book	--
15	TN57 P4705 என்ற வாகனத்தின் RC Book	--
16	TN57AC 5089 என்ற வாகனத்தின் RC Book	--
17	TN57BZ1217 என்ற வாகனத்தின் RC Book	--
18	TN57AB 7312 என்ற வாகனத்தின் RC Book	--
19	TN57BU 8726 என்ற வாகனத்தின் RC Book	--

மேற்படி ஆவணங்கள் மற்றும் பணம் குறித்து திரு.பாண்டியராஜன் அவர்களிடம் விசாரிக்க மேற்படி ஆவணங்கள் பெயர் மாற்றம், FC Renewal ஆகிய பணிகளை செய்வதற்காக வாங்கி வைத்திருப்பதாகவும், மேற்படி பணம் ரூ.21,420/-ஆனது பணிகளை செய்வதற்காக வாகனங்களின் உரிமையாளர்களிடமிருந்து வத்தலக்குண்டு போக்குவரத்து ஆய்வாளர் அலுவலகத்திற்கு கொடுப்பதற்கு பெற்ற பணம் என்றும் தெரிவித்தார். அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளதக்க வகையில் இல்லாததாலும், மேற்படி பணத்தை மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.இளங்கோ அவர்கள் செய்து தந்த பணிகளுக்காக லஞ்சமாக கொடுக்க வைத்திருந்த பணம் என்று நம்புவதற்கு போதிய முகாந்திரம் இருந்ததால் விசாரணைக்காக மகஜரில் பணம் ரூ.21,420/- கைப்பற்றப்பட்டது. பின்னர் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.இளங்கோ அவர்கள் முன்பு திரு.அஜய் ஜான்சன் அவர்கள் சோதனை செய்யப்பட்டார். அப்பொழுது திரு.அஜய் ஜான்சன் அவர்கள் அணிந்திருந்த சட்டையின் உள்ளே

அணிந்திருந்த பனியனுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த இரண்டு பணக்கட்டுகளை வெளியே எடுத்து ஆஜர் செய்தார். ஒரு பண கட்டில் வெள்ளை நிற துண்டு சீட்டில் கீழ் கண்டவாறு எழுதப்பட்டு கட்டின் மேல் ரப்பர் பேண்ட் போடப்பட்டிருந்தது. "கண்மணி 34x400=13600, 16x200=3200, NP 2X300=600, 1X200=200" என்று குறிப்பிட்டு மொத்தத் தொகை எழுதப்பட்டிருந்தது. அதனை எண்ணி பார்க்க ஒரு கட்டில் 500x12=6000, 200x9=1800, 100x98=9800 ஆக மொத்தம் ரூ.17,600/- இருந்தது. மற்றொரு கட்டில் ஒரு வெள்ளை நிற துண்டு சீட்டில் 14.10.2025 தேதியிட்டு கீழ்கண்டவாறு எழுதப்பட்டு தொகை குறிப்பிடப்பட்டிருந்தது. "Sri Surya TVS Palani 5x800=4000, DL 3X200=600, Velan Yamaha Palani 4x800=2400, 1x200=200, என எழுதப்பட்டிருந்தது. அந்த கட்டை எண்ணிப்பார்க்க 500x5=2500, 100x47=4700 ஆக மொத்தம் ரூ.7,200/- இருந்தது. பின்னர் திரு.அஜய் ஜான்சன் அணிந்திருந்த நீல நிற ஜீன்ஸ் பேண்டின் இடது பக்க சைடு பாக்கெட்டை சோதனை செய்ய கீழ்கண்டவாறு பணம் இருந்தது கண்டறியப்பட்டது. 500x117=58,500, 200x14=2800, 100x12=1200, மேற்படி பணத்தாள்களுக்கிடையே காக்கிநிற துண்டு சீட்டில் கீழ்கண்டவாறு எழுதப்பட்டு மொத்த தொகை குறிப்பிடப்பட்டிருந்தது. EIVFC - 3000, 3M1000, NCPF3-3-4500, Late - 500, 3M-3-3000, NCPAdv 1000, Car Reg(TR)2500 என்று குறிப்பிடப்பட்டிருந்தது. மேலும் திரு.அஜய் ஜான்சன் அவர்கள் அணிந்திருந்த சட்டையின் வெளிப்புற பாக்கெட்டை சோதனையிட ஐநூறு ரூபாய் நோட்டுகள் 7 எண்ணிக்கையில் ரூ.3500/- இருப்பது கண்டறிப்பட்டது. மேலே கண்டவாறு திரு.அஜய் ஜான்சன் அவர்களிடம் கண்டறியப்பட்ட மொத்தப்பணம் ரூ.90,800/- குறித்து விளக்கம் கேட்க திரு.அஜய் ஜான்சன் அவர்கள் மேற்படி பணமானது வாகன பதிவிற்காக வந்த வாகன விற்பனையாளர்கள் கொடுத்த பணம் என்றும், அதனை வாங்கி மோட்டார் வாகன ஆய்வாளருக்கு கொடுப்பதற்கு வைத்திருந்ததாகவும் தெரிவித்தார். அந்த பணமானது வாகன பதிவு தொடர்பான பணிகளை செய்து தருவதற்காக லஞ்சமாக பெறப்பட்டு திரு.அஜய் ஜான்சன் அவர்கள் வைத்திருப்பதற்கான முகாந்திரம் இருப்பது தெரியவந்ததால் விசாரணைக்காக மகஜரில் பணம் ரூ.90,800/- கைப்பற்றப்பட்டது. பின்னர் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.இளங்கோ அவர்களை சோதனை செய்ய அவரிடம் பணம் ஏதும் கண்டறியப்படவில்லை. பின்னர் திரு.பாண்டியராஜன் அவர்கள் வைத்திருந்த கைப்பையில் வத்தலக்குண்டு மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலக ஆவணங்கள் இருப்பது

தெரியவந்ததாலும், பக்கத்திலேயே அலுவலகம் வைத்திருப்பது தெரிந்ததாலும் அவரது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள ஆவணங்கள் குறித்து கேட்கப்பட்டது. அதற்கு திரு.பாண்டியராஜன் அவர்கள் வத்தலக்குண்டு மோட்டார் வாகன அலுவலகத்தின் ஆவணங்கள் பணிகள் செய்து கொடுத்த பின்பு அவரது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருப்பதாக தெரிவித்தார். பின்னர் அவர் கூறியதின் பேரில் வத்தலக்குண்டு மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவல்க கண்காணிப்பாளர் திரு.ராதாகிருஷ்ணன், உதவியாளர் திரு.சரவணபாண்டியன் ஆகியோருடன் திரு.பாண்டியராஜன் அவர்களின் அலுவலகம் அமைந்துள்ள ஸ்ரீவாகன பரிசோதனை மையத்தின் பின்புறம் கிழக்கு முகம் பார்த்தவாறு இருந்த அலுவலகத்தில் நுழைந்து பார்த்தபோது வத்தலக்குண்டு மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம் தொடர்பான கீழ்கண்ட ஆவணங்கள் இருப்பது கண்டறியப்பட்டது.

வ.எண்	ஆய்வு செய்த நாள்	தகுதி சான்று புதுப்பிப்பு மனுக்களின் எண்ணிக்கை
1	01.08.2025	17
2	04.08.2025	18
3	05.08.2025	12
4	06.08.2025	14
5	07.08.2025	13
6	08.08.2025	10
7	11.08.2025	23
8	12.08.2025	12
9	13.08.2025	16
10	14.08.2025	14
11	20.08.2025	31
12	21.08.2025	19
13	22.08.2025	16
14	25.08.2025	14
15	26.08.2025	18
16	28.08.2028	13
17	29.08.2025	12

18	01.09.2025	22
19	02.09.2025	15
20	03.09.2025	12
21	04.09.2025	9
22	08.09.2025	17
23	09.09.2025	13
24	10.09.2025	20
25	12.09.2025	22
26	15.09.2025	15
27	17.09.2025	18
28	18.09.2025	12
29	19.09.2025	17
30	22.09.2025	21
31	23.09.2025	12
32	24.09.2025	10
33	25.09.2025	16
34	26.09.2025	17
35	29.09.2025	15
36	30.09.2025	25
37	03.10.2025	10
38	06.10.2025	20
39	07.10.2025	9
40	08.10.2025	19
41	28.07.2025	15
42	29.07.2025	15
43	30.07.2025	13
44	31.07.2025	15

மேற்படி ஆவணங்கள் வத்தலக்குண்டு மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்திற்கு எடுத்து வரப்பட்டு மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.இளங்கோ அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டு அரசு ஆவணங்களை முறையாக கோப்புகளிட்டு அலுவலகத்தில் வைத்து பராமரிக்குமாறு அறிவுறுத்தப்பட்டது. பின்னர் வத்தலக்குண்டு மோட்டார் வாகன அலுவலகத்தில் வருகைப்பதிவு 2025, பணியாளர்களின் கையிருப்பு பதிவேடு 02.01.2025 முதல் மற்றும் 14.10.2025ம் நாளிற்கான Transaction Report ஆகிய பதிவேடுகள் பார்வையிடப்பட்டு தொடர்புடைய பக்கங்கள் நகல் எடுக்கப்பட்டு திரு.இளங்கோ அவர்களின் சான்றொப்பம் பெறப்பட்டு விசாரணைக்காக மகஜரில் கைப்பற்றப்பட்டது. அலுவலகத்தில் பணியில் இருந்த கண்காணிப்பாளர் திரு.ராதாகிருஷ்ணன், உதவியாளர் திரு.சரவணபாண்டியன், இளநிலை உதவியாளர் திருமதி.கஸ்தூரி ஆகியோரை சோதனை செய்ய தனிநபர் பணப்பதிவேட்டில் குறிப்பிடப்பட்டிருந்த தொகை மட்டுமே காணப்பட்டது. அந்த பணம் அவர்களிடமே திரும்ப கொடுக்கப்பட்டது. அலுவலகத்தின் மற்ற அறைகளை சோதனை செய்தபோது சந்தேகத்திற்கிடமான வகையில் பணமோ பொருளோ கண்டறியப்படவில்லை. சோதனையின் போது கீழ்கண்டவாறு பணம் ரூ.1,12,220/-ஆனது வாகனம் தொடர்பான சட்டப்படியான பணிகளை செய்து தருவதற்காக லஞ்சமாக பெறப்பட்ட பணம் என்று நம்புவதற்கு தகுந்த முகாந்திரம் இருப்பதாலும் வழக்கின் விசாரணைக்கு தேவைப்படுவதாலும் மகஜரில் கைப்பற்றப்பட்டது.

வ.எ ண்	யாரிடமிருந்து கைப்பற்றப்பட்டது	கைப்பற்றப்பட்ட தொகை ரூ
1	பாண்டியராஜன், த/பெ.மொக்கமாயி, நடுத்தெரு, உச்சப்பட்டி, நிலக்கோட்டை	21,420/-
2	திரு.அஜய்ஜான்சன், த/பெ.சேவியர், சிலுக்குவார்பட்டி, நிலக்கோட்டை	90,800/-
	மொத்தம்	1,12,220/-

கீழ் கண்ட ஆவணங்கள் நகல்கள் எடுக்கப்பட்டு விசாரணைக்காக மகஜரில் கைப்பற்றப்பட்டது. பின்னர் அந்த ஆவணங்கள் நல்ல முறையில் ஆய்வுகுழு ஆய்வாளர் முன்பாக சம்மந்தப்பட்ட நபர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

வ.எ ண்	கைப்பற்றப்பட்ட ஆவண விபரம்	பக்கங்களின் எண்ணிக்கை
1	TN 57N 2182 என்ற வாகனத்திற்கான தகுதிசான்று பெறுவது சம்மந்தமான விண்ணப்பம்.	8 தாள்கள்
2	TN 57N 2487 என்ற வாகனத்திற்கான தகுதிசான்று பெறுவது சம்மந்தமான விண்ணப்பம்.	7 தாள்கள்
3	வத்தலக்குண்டு காவல் நிலைய குற்ற எண்.290/2025 என்ற வழக்கில் தொடர்புடைய TN57CY 7722 டாடா ஏஸ் வாகனத்தை தணிக்கை செய்து சான்று வழங்க வத்தலக்குண்டு காவல் நிலைய ஆய்வாளரால் வழங்கப்பட்ட வேண்டுகோள் கடிதம்.	6 தாள்கள்
4	TN30 AJ 0819 என்ற வாகனத்திற்கு வாகன வகை மாற்றம் கோரும் மனு மற்றும் அதனுடன் மேற்படி வாகனத்தின் அசல் பதிவு சான்று வைக்கப்பட்டிருந்தது.	16 தாள்கள்
5	TN57L 3244 என்ற வாகனத்திற்கான தகுதிசான்று பெறுவது சம்மந்தமான விண்ணப்பம்.	5 தாள்கள்
6	TN 67S0402 என்ற வாகனத்தின் பதிவை புதுப்பிப்பதற்கான விண்ணப்பம்.	4 தாள்கள்
7	TN 67S0403 என்ற வாகனத்தின் பதிவை புதுப்பிப்பதற்கான விண்ணப்பம்.	2 தாள்கள்
8	மோட்டார் வாகனங்களுக்கு சிறப்பு பதிவெண் பெறுவதற்கான விண்ணப்பம் TN57CT 9697.	2 தாள்கள்
9	TN 85L9633 என்ற வாகனத்தின் HIRE PURCHASE Removal Application.	8 தாள்கள்
10	TN 60W1489 என்ற வாகனத்தின் Name Transfer Application	6 தாள்கள்
11	TN 76S9430 என்ற வாகனத்தின் Name Transfer Application.	6 தாள்கள்
12	திரு.அஜய் ஜான்சன் அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட பண விபரங்கள் எழுதப்பட்ட துண்டு சீட்டுகள்.	3 தாள்கள்
13	வத்தலக்குண்டு மோட்டார் வாகன அலுவலகத்தில் வருகைப்பதிவு 2025.	தொடர்புடைய பக்கங்கள்
14	பணியாளர்களின் கையிருப்பு பதிவேடு 02.01.2025 முதல்	தொடர்புடைய பக்கங்கள்
15	14.10.2025ம் நாளிற்கான Transaction Report	1 தாள்

மேலும் இத்திடீர் தணிக்கையின் போது அலுவலகத்திலிருந்த ஆவணங்களுக்கோ மற்ற பொருட்களுக்கோ சேதம் ஏதும் ஏற்படுத்தப்படவில்லை. மேலும் சோதனையின் போதிருந்த அலுவலர்களுக்கோ, மற்றவர்களுக்கோ உடல் ரீதியாகவோ மற்றும் மன ரீதியாகவோ எவ்வித துன்புறுத்தலும் ஏற்படுத்தவில்லை. இந்த திடீர் இணை ஆய்வு தொடர்பாக செயல்முறை குறிப்புகள் 14.10.2025ம் தேதி 12.30 மணிமுதல் 19.30 மணிவரை தயார் செய்யப்பட்டது.

எனவே மேற்படி கணக்கில் வராத லஞ்சப்பணம் ரூ.1,12,220/- தொடர்பாக வத்தலக்குண்டு மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-I திரு.இளங்கோ, மற்றும் தனி நபர்கள் திரு.M.பாண்டியராஜன், த/பெ.மொக்கமாயி, நடுத்தெரு, உச்சப்பட்டி, நிலக்கோட்டை, திரு.S.அஜய்ஜான்சன், த/பெ.சேவியர், சிலுக்குவார்பட்டி, நிலக்கோட்டை ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு Sd/-xxxxx (Tr.R.Sridharapandian, 15/10/2025)

Sir, Received the complaint on 15.10.2025 at 17.00 Hrs. and registered a case in Dindigul Vigilance and Anti-Corruption Cr.No.12/2025, u/s 7(a)of of P.C Act 1988, as amended by the PC (amendment) Act 2018, on 15.10.2025 at 17.00 hrs. Sd/-xxxxx (P.Palanisamy, Inspector of Police, V&AC, Dindigul 15.10.2025)

Original FIR along with the complaint of Tr.R.Sridharapandian, the Inspection Cell Inspector, O/o. the Inspection Cell Officer, Madurai and the Joint Surprise check proceedings are submitted to the Hon'ble Principal District Judge, Dindigul and copy of the FIR is submitted to the Director, Vigilance and Anti Corruption, Chennai.

15/10/25

(P.Palanisamy)
Inspector of Police,
Vigilance & Anti-Corruption,
Dindigul.